


**01. 02. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நாட்டில் வரும் ஏப்ரல் மாதத்திலிருந்து புதிய வருமான வரிச்சட்டம் நடைமுறை படுத்தப்படும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளார்.

2. காதி, கைத்தறி, கைவினை துறையை வலுப்படுத்த மகாத்மா காந்தி கிராம ஸ்வராஜ் திட்டம்

விபத்து காப்பீடு இழப்பீட்டு தொகைக்கு வருமான வரி விலக்கு, புற்றுநோய் சிகிச்சைக்கான 17 மருந்துகளுக்கு சுங்கவரி நீக்கம்

அனைத்து மாவட்டங்களிலும் பெண்கள் விடுதி ஏற்படுத்தப்படும்

தமிழ்நாடு உள்ளிட்ட 5 மாநிலங்களில் கனிம வழித்தடங்கள் மேம்படுத்தப்படும்

சென்னை – பெங்களுரு, ஹைதராபாத் – சென்னை உள்ளிட்ட 7 அதிவேக ரயில் வழித்தடங்கள் ஏற்படுத்தப்படும்

ஆதிச்சநல்லூரில் கலாச்சார மையம் அமைக்கப்படும் உள்ளிட்ட அறிவிப்புகள் பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளன.

3. தமிழ்நாட்டில் தைப்பூச திருவிழா இன்று பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படுகிறது.

இனி விரிவான செய்திகள்

*************

நிதிநிலை அறிக்கை

நாட்டில் வரும் ஏப்ரல் மாதம் முதல் புதிய வருமான வரிச்சட்டம் நடைமுறைக்கு வரும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அறிவித்துள்ளார்.

மக்களவையில் 2026-27-ம் நிதியாண்டிற்கான மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையை இன்று தாக்கல் செய்து உரையாற்றிய அமைச்சர் தனிநபர் வருமான வரி விலக்கில் எவ்வித மாற்றமும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

வருமான வரி கணக்கு தாக்கல் நடைமுறை எளிமையாக்கப்படும்

திருத்தப்பட்ட வருமான வரி கணக்கு தாக்கல் செய்ய கால நீட்டிப்பு

வரி சார்ந்த அதிகபட்ச தண்டனை இரண்டு ஆண்டுகளாக குறைப்பு என்றும் அறிவித்தார்.

மாநிலங்களுக்கான வரி பகிர்வு விகிதத்தில் மாற்றமில்லை என்றார்.

வருமான வரி தாக்கலில் பொய் கணக்கு காட்டப்பட்டால் 100 சதவிகிதம் அபராதம் விதிக்கப்படும்

விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் இழப்பீட்டு தொகைக்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

நாடுமுழுவதும் 50 சதவிகித மாவட்ட மருத்துவ மனைகளில் அவசர சேவை, திறன் கட்டமைப்பு மற்றும் சிகிச்சை மையங்கள் அதிகரிக்கப்படும்

மருத்துவ கல்விக்கடனுக்கான வரியும், வெளிநாட்டு சுற்றுலாவிற்கான வரி பிடித்தம் 2 சதவிகிதமாக குறைக்கப்படும்.

Cloud சேவைகளை வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு 2047 வரை வரி விலக்கு போன்ற அறிவிப்புகளையும் அவர் வெளியிட்டார்.

வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான அசையா சொத்து விற்பனை மீதான வரி குறைக்கப்படும்

பங்குகளை திருப்பி வாங்கும் நிறுவனங்களுக்கு மூலதன ஆதாய வரி விதிக்கப்படும்

காலணிகள், கடல் சார்ந்த உணவு ஏற்றுமதிக்கு வரி இல்லா மூலப்பொருள் இறக்குமதி செய்ய சலுகை

லித்தியம் பேட்டரிக்கு இறக்குமதி வரியிலிருந்து விலக்களிக்கப்படும் என்று தெரிவித்தார்.

உள்நாட்டில் பயிற்சி விமானங்களை உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களுக்கு சுங்கவரி நீக்கப்படும்

ஏற்றுமதி தொழில் நிறுவனங்கள் உள்நாட்டு சந்தையில் விற்பனை செய்ய அனுமதி வழங்கப்படும்

புற்றுநோய் சிகிச்சைக்கான 17 மருந்துகளுக்கு சுங்கவரி நீக்கம்

அரியவகை நோய்களுக்கான மருந்துகளின் இறக்குமதி வரிகள் நீக்கம்

சூரிய மின் தகடுகள் உற்பத்திக்கான சோடியத்திற்கு முழு வரி விலக்கு

ஆழ்கடல் பிரத்யேக பொருளாதார மண்டலத்தில் பிடிக்கப்படும் மீன்களுக்கு விலக்களிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

*************

ஒதுக்கீடு

நாட்டில் உயிரி மருத்துவ திட்டத்திற்கு 10 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு

நீர்வழித்தடங்களை மேம்படுத்த 20 ஆயிரம் கோடி முதலீடு செய்யப்படும்

20 புதிய தேசிய நீர்வழிப்பாதைகள் அடுத்த 5 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும் என்றார்.

*************

ரயில்

சென்னை – பெங்களூரு ஹைதராபாத் – சென்னை உள்ளிட்ட 7 அதிவேக ரயிலுக்கான வழித்தடங்கள் மேம்படுத்தப்படும் என்றார்.

.. வாய்ஸ்..

சரக்கு போக்குவரத்திற்கான பிரத்யேக ரயில் பாதை அமைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

*************

சுற்றுலா

சுற்றுலாவை மேம்படுத்தி கடைகோடி பகுதிக்கும் இணைப்பை உருவாக்கும் வகையில் உள்நாட்டிலேயே கடல் மார்க்க விமானங்களை உருவாக்க ஊக்கத்தொகை வழங்கப்படும்,

பொதிகை மலையில் மலையேற்ற சுற்றுலாவை ஊக்குவிக்கப்படும்,

மருத்துவ சுற்றுலாவை மேம்படுத்த 5 இடங்களில் மையம் உருவாக்கப்படும்

தனியார் துறையுடன் இணைந்து மருத்துவ சுற்றுலாவை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்

தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் கலாச்சார மையம் அமைக்கப்படும்

.. வாய்ஸ் ..

சென்னை பழவேற்காட்டில் பறவைகளை பார்வையிடும் இடம் சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தப்படும் என்று கூறினார்.

*************

உற்பத்தி

காதி, கைத்தறி, கைவினைத் துறைகளை வலுப்படுத்த மகாத்மா காந்தி கிராம ஸ்வராஜ் திட்டம் செயல்படுத்தப்படும்,

ஜவுளித்துறையை மேம்படுத்த ஜவுளி பூங்காக்கள் அமைக்கப்படும்,

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்காக 10 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு,

வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நிறுவனங்கள் நிலைக்குழுவில் உயர்நிலை கல்வி அமைப்பு ஏற்படுத்தப்படும்

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு கடனளிக்கும் மையங்களுக்கு கட்டமைப்பு உத்தரவாத நிதியம் ஏற்படுத்தப்படும்,

3 தேசிய மருந்தியல், கல்வி, ஆராய்ச்சி நிறுவனங்கள் உருவாக்கப்படும்,

செமி கண்டக்டர் உற்பத்தியின் இரண்டாவது கட்ட திட்டம் செயல்படுத்தப்படும்

மின்சார வாகன விற்பனையை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழகம், கேரளம், ஆந்திரம், ஒடிஷா மாநிலங்களில் அரிய தாதுபொருள் தொழில் வழித்தடங்கள் ஏற்படுத்தப்படும்

உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்தி இறக்குமதியை குறைக்க 3 ரசாயன பூங்காக்கள் ஏற்படுத்தப்படும்

சரக்கு பெட்டக உற்பத்தி திட்டத்திற்கு 10 ஆயிரம் கோடி ரூபாய் அனுமதிக்கப்படும் என்றார்.

பெண்களை தொழில்முனைவோராக்கும் வகையில் கிராமங்களில் மகளிர் சுயஉதவிக்குழு பெண்கள் நடத்தும் SHE MART கடைகள் உருவாக்கப்படும்

அனைத்து மாவட்டங்களிலும் பெண்கள் விடுதி ஏற்படுத்தப்படும்

முந்திரி, கோக்கோ, சந்தனம் உற்பத்தியை ஊக்குவிக்க திட்டம்,

தென்னை உற்பத்தி செய்யும் மாநிலங்களில் புதிய தென்னங்கன்றுகள் நடப்படும்,

தேங்காய் உற்பத்தி அதிகரிக்கப்படும்

கடலோர பகுதிகளில் தென்னைமர சாகுபடி ஊக்குவிக்கப்படும் என்று கூறினார்.

*************

பொருளாதார வளர்ச்சி

வங்கித்துறையை சீர்த்திருத்தி அடுத்த கட்ட வளர்ச்சிக்கு வழிவகுக்க உயர்மட்ட குழு அமைக்கப்படும்

நகராட்சி பத்திரம் வெளியீட்டு நிதியை திரட்ட 100 கோடியில் திட்டம் மேற்கொள்ளப்படும்

பங்கு சந்தைகளில் வெளிநாடுவாழ் இந்தியர்கள் முதலீட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்

மின்னணு தொழில்நுட்ப வளர்ச்சிக்கு 40 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்,

பொருளாதார மண்டல நகரங்கள் மேம்படுத்தப்படும்

3 தேசிய ஆயுர்வேத மருத்துவமனைகள் அமைக்கப்படும் என தெரிவித்தார்.

*************

கல்வி

கல்வியை ஊக்குவிக்க பல்கலைக்கழக நகரங்கள் உருவாக்கப்படும்

மாவட்டந்தோறும் மகளிர் விடுதி அமைக்கப்படும்

கால்நடை கல்வி நிறுவனங்களுக்கு முதலீட்டு மானியம் அளிக்கப்படும் என்றார்.

*************

கடன் மூலதனம்

2026-27ம் நிதியாண்டில் பதினானரை லட்சம் கோடி ரூபாய் கடன்பெற திட்டமிடப்பட்டுள்ளதாக நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்த உற்பத்தியில் 4.4 சதவிகிதமாக மதிப்பிட்டுள்ளது.

5 லட்சம் மக்கள் தொகைக்கு மேற்பட்ட நகரங்களில் கட்டமைப்பை மேம்படுத்த பொது மூலதனத்தில் 12 லட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாய் அதிகரிக்கப்படும்

மின்சாரம், எஃகு, சிமெண்ட், சுத்திகரிப்பு மற்றும் ரசாயன பிரிவுகளில் கரியமில வெளியேற்றத்தை கட்டுப்படுத்துவதற்காக 20 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் கூறினார்.

*************

விளையாட்டு

நாட்டில் அடுத்த 10 ஆண்டுகளில் விளையாட்டு துறையை மாபெரும் மாற்றங்களுடன் முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்லும் வகையில் கேலோ இந்தியா இயக்கம் செயல்படுத்தப்படும் என குறிப்பிட்டார்.

நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்த பின்னர், நிதி மசோதா 2026-ஐ நிதியமைச்சர் அவையில் அறிமுகம் செய்தார்

இதனைத் தொடர்ந்து மக்களவை நாளைவரை ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை இன்று காலை நிதிநிலை அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கியது.

தொடர்ந்து மாநிலங்களவையிலும் 2026-27-ம் நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்த நிதியமைச்சர் அடுத்த 5 ஆண்டுகளுக்கான வரி, வருவாய், பகிர்வு தொடர்பான நிதி ஆணையத்தின் 16-வது அறிக்கையையும் தாக்கல் செய்தார்.

இதனைத்தொடர்ந்து மாநிலங்களவை நாளை வரை ஒத்திவைக்கப்பட்டது.

*************

பிரதமர்

140 கோடி இந்தியர்களின் விருப்பங்களை மத்திய பட்ஜெட் பிரதிபலிப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பாராட்டியுள்ளார்.

நாட்டின் சீர்த்திருத்த பாதையை வலுப்படுத்தி வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான தெளிவான வரைபடத்தை நிதிநிலை அறிக்கை பறைசாற்றுவதாக புகழாரம் சூட்டியுள்ளார்.

*************

கடலோர காவல் படை

கடலோர காவல் படையின் 50-வது எழுச்சி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

தேசிய கடலோர பகுதிகளின் பாதுகாப்பு அரணாக இந்திய கடலோர காவல்படையினர் திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

கடல்சார் பாதுகாப்பு பேரிடர் காலங்களில் அளப்பறிய சேவை, கடல்சார்ந்த சுற்றுச்சூழலை முன்னெடுத்துச் செல்வது போன்றவற்றில் கடற்படையினரின் அளப்பரிய சேவையை பாராட்டியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில் கடலோர படையினரின் கண்காணிப்பு, அர்ப்பணிப்பு சேவை, கடல் எல்லைகளின் பாதுகாப்பை நாள்தோறும் உறுதி செய்வதாக குறிப்பிட்டுள்ளார்.

1977-ம் ஆண்டு இதே நாளில் 7 கப்பல்களுடன் தொடங்கப்பட்ட கடலோர காவல்படை தற்போது 155 கப்பல்கள் மற்றும் 80 விமானங்களை கொண்ட வலிமைமிகு கடல்சார் காவல்படையாக உருவெடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

*************

தைப்பூசம்

தைப்பூச திருவிழா முருகப்பெருமான் திருக்கோவில்களில் இன்று பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படுகிறது.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் இன்று அதிகாலையிலேயே கோவில் நடை

திறக்கப்பட்டு சிறப்பு அபிஷேக ஆராதானைகள் நடைபெற்றன.

*************

கிரிக்கெட்

ஸிம்பாப்வே புலவாயோவில் 19 வயதிற்கு உட்பட்டோருக்கான உலககோப்பை ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியின் சூப்பர் 6 பிரிவில் பாகிஸ்தானுக்கு எதிராக முதலில் பேட் செய்யும் இந்தியா சற்றுமுன் 25 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 109 ரன் எடுத்திருந்தது.

முன்னதாக டாஸ் வென்ற பாகிஸ்தான் முதலில் பந்துவீச தீர்மானித்தது.

*************

பேட்மிட்டன்

பாங்காக்கில் நடைபெறும் தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் மகளிர் ஒற்றையர் சேம்பியன் பட்டத்தை இந்தியாவின் தேவிகா சிஹாக் கைப்பற்றியுள்ளார்.

இறுதிஆட்டத்தில் மலேஷியாவின் ஜின் வேய்- காயம் காரணமாக வெளியேறியதை அடுத்து தேவிகா 21-8 6-3 என்ற செட்களில் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது